Subscription.
Inland: Rs. 50/- year
For Advertisement
Apply to:
The Manager
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89]
Established: 1841: A Christian Weekly: Published Every Friday
Vol. 149 Jaffna, Friday, 08 SEPTEMBER 1989 No. 36
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to
THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## One Bible for All.

The Revised English Bible (R E B) is completely a new version of the Bible for Christians of every church or persuasion. Arising from a fundamental revision of the New English Bible, it is the first version that has been planned and developed from the start to be acceptable to all Christians. This new Bible is the result of a unique co-operation between all the major Christian Churches in the British Isles. Lord Coggan, former Archbishop of Canterbury and Chairman of the Joint committee of the churches on the Revised English Bible has said "I commend the Revised English Bible to you without reservation. I trust that it will become established as the 'Bible for Everyone' both in private use and in the public worship of the church.".

The Revised English Bible building on the tested strengths and qualities of the N E B provides an even more up-to-date text which can be read altogether independently of any other version. It is intended for people of all ages both for reading aloud in church and for study in schools, colleges and at home. Teams of specialists as well as Christians from other walks of life have worked together to provide a text that uses clear and up-to-date but dignified language that will speak in a natural and understandable way to all. Representatives of all the major churches asked the Rev. Prof. W. D. McHardy to recruit teams of scholars specialising in every aspect of biblical scholarship. They reviewed the New English Bible alongside the ancient texts in Hebrew, Aramaic and Greek in the light of current English usage in speaking, writing and worshipping. The churches involved are:

The Baptist Union of Great Britain
The Church of England
The Church of Scotland
The Council of Churches for Wales
The Irish Council for Churches
The London Yearly Meeting of the Religious Society of Friends
The Methodist Church of Great Britain
The Moravian Church in Great Britain and Ireland
The Roman Catholic Church in England and Wales
The Roman Catholic Church in Ireland
The Roman Catholic Church in Scotland
The Salvation Army
The United Reformed Church.

The qualities of the REB may be summed up as follows:

Presented in style, ideal for reading aloud and immediately understandable when heard.

Avoids technical excessively literary vocabulary wherever possible.

Avoids reliance on traditional biblical or religious words using

*You* always rather than *thou*.

Avoids male-orientated language wherever possible without compromising the meaning.

Provides the most thorough hand up-to-date translation which will prove essential as a guide and key to older or more difficult translations.

*News:*

### ★ Araly Church Day Care Centre.

The members of the Araly Church have been for the last few months making plans to start a Day Care Centre for children of the very poor in the vicinity. The Church members with some financial assistance from the Diocese have re-modelled the Lambert Hall and constructed the necessary additions to run a Day Care Centre. The centre was declared open on Monday the 14th of August at 9 a. m. by the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar. The centre will take in about 50 children under the age of five. At the public meeting which followed the opening and the dedication, Mr. T. Sathianathan of the Araly Church, the Rev. A. Jeyakumaran, Circuit Pastor of the Church and Mr. G. Rajanayagam of the YMCA also spoke. Mr. S. Jeyaratnam, Attorney-at-law spoke on behalf of the Araly public and expressed his appreciation of this great community service the Church was rendering to the village.

### ● Mahilchipuram Day Care Centre.

The Day Care Centre at Mahilchipuram was started last year in a temporary stucture. The Diocese decided to put up a permanent structure which has just been completed. The new building was opened and dedicated by the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar on Thursday the 17th of August at 2 p. m. Financial assistance for this building was from a grant made by the Indiana-Kentucky Conference of the United Church of Christ. Mahilchipuram is a new village on the Kandy Road, six miles south of Mankulam. The whole village turned up for the opening ceremony. There are more than 60 children at this Day Care Centre. The Rev. D. S. Thiagarajah who supervised the work thanked all those who extended their co-operation in starting the Day Care Centre.

### Day Care Centre, Kanagarayankulam.

Work on the new Day Care Centre at "Arulpuram" in Kanagarayankulam was started some months ago. A temporary structure along with a well and other facilities have just been completed. This Day Care Centre was formaly declared open by the Bishop the Rt. Rev. D. J. Ambalavanar on Friday the 25th of August at 10 a. m. The Rev. Daniel S. Thiagarajah welcomed the large number from the village and thanked them for their goodwill and co-operation. Mr. K. Thambirajah, Grama Sevaka of the area thanked the Diocese for this significant service it was rendering to the village.

### ★ Director for Projects.

Mr. Noel Suresh Thampoe has been appointed Director for Projects in the Jaffna Diocese of the CSI from August this year. Suresh is the second son of the late Rev. Sam Thampoe. He had his education at Jaffna College and later obtained the B. Sc. degree from the Madras Christian College, Thambaram. He continued at the Christian College for two more years and completed the M. A degree in Public Administration.

### ● In Brief.

Mr. T. A. Tampiyappa Agricultural Officer Jaffna, has been promoted as Assistant Director of Agriculture. He will assume duties at Kilinochchi from next month, and will be in charge of the Kilinochchi District. Mr. Tampiyappa is the eldest son of the late Mr. T. A. Tampiyappa of Uduvil and Mrs. Tampiyappa presently in Kandy.

### ★ An Irish Prayer.

*Jesus my Lord and my God,*
*Welcome into my heart,*
*I bow down before you, I adore you*
*O my Jesus, I beleive in you,*
*O my Jesus, I hope in you.*
*O my Jesus. I love you,*
*O my Jesus, I thank you*
*O my Jesus, I am sorry for my sins and I will not sin again.*
*Pardon me and help me with your Holy grace.*
*Jesus, may I live in you;*
*Jesus, may I die in you,*
*Jesus, may I belong to you*
*In life and in death. — Amen.*

(This prayer is usually said after the Holy Communion Service in one of the Churches in Nigeria.)

### Christian Spirituality in the Context of Suffering.

Today, we are witnessing an amazing resurgence of religion in its fundamentalist and new forms. Religious communities are becoming more and more aggressive, exclusive and insular. Religion instead of being a liberating and uniting force has become a reactionary and divisive force.

The Youth department of the National council of churches in India organised a four-day Workshop on 'Spirituality and human Suffering' at Dehra Dun. About 20 young people took part in this Workshop. They were from different states and churches in North India.

Through the quiet introspective meditations, brain storming sessions, group discussions, bible studies, etc. the participants tried to discover the meaning of Christian spirituality in the context of Indian realities. Three papers were presented during the Workshop.

The first paper was presented by Mrs. Vinita Deena-bandhu who spoke on ' Democracy and Development in India Today'. She pointed out that in spite of the many advancements made in the fields of science, technology, Industry, agriculture, etc. the impoverishment of millions of our people is an ongoing reality. The problem, therefore, is structural as the successive feudal and capitalist economies have vested all economic and political powers in the hands of a few people and whatever is done in the name of development is for the advantage of the affluent sections of the society, she added. In a situation such as this, democracy and socialism have no meaning.

( continued on page 4. )

# உதய தாரகை

UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ். வெள்ளிதோறும் வெளிவருவது

நீதி ஜனத்தை உயர்த்தும் : பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்

மலர் 149 08 - 09 - 1989 [இதழ் 36


## சிந்தனை 29.

புத்தகம் ஆமோஸ் 1, 2 ஆம் அதிகாரங்கள்.

### எல்லா மக்களும் இறை மக்களே!

விதி விபத்துக்களும் அகால மரணங்களும் மலிந்து காணப்படும் இன்றைய நாட்களில் அவற்றைத் தடுக்க மக்கள் முன்வர வேண்டும். வீதி ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற விருப்புடையோர் அனேகர் இருக்கின்றார்கள்—ஏனோ செயற்படாது விட்டுவிட்டார்கள்?

ஒழுங்கு முறைகளைப்போ, ஒழுக்க விதிகளைப்போ நடைமுறைப்படுத்துவதை விடப் பொருள் சேர்ப்பதே மக்களின் முக்கிய கவனமாகி விட்டது. எப்படியும் வாழலாம்—என்ன முறைகளைப் பயன்படுத்திப் பொருளீட்டிக் கொள்ளலாம் என்பது பொது விதியாகி விட்டது. எனவே தான் விபத்துக்களும் அகால மரணங்களும், விபரீதங்களும் இன்றைய மனித வாழ்வியலில் தவிர்க்க முடியாத சந்திப்புக்களாகி விட்டன.

வீதி ஒழுங்கு பாதுகாப்பதற்கெனச் சமிக்கை விளக்குகள் செயற்படுகின்றன. இவ்விளக்குகள், பாதசாரிகளின்-வாகன ஓட்டிகளின் காப்பாளர்கள். இவ் விளக்குகளுக்கு இன, மொழி வேறுபாடு இல்லை. இல்லாதவன், இருப்பவன் என்ற கவலையும் இல்லை. அர்த்தமற்ற தர்க்கங்களுக்கு நேரமும் இல்லை. பக்கம் சார்ந்து செயற்படவும் மாட்டா. இவ்விளக்குகளின் கவனமெல்லாம் மக்களை வீதி ஒழுங்கின்படி வாழப்பழக்குவது தான். இச்சமிக்கை விளக்குகளுக்கு மனித இனத்தில் எவ்வளவு கரிசனை.

வேற்றுமை உணர்வு, வீண் விவாதம், தன்மக்கள், வேற்று மக்கள் என்ற வேறுபாடு, பக்கச்சார்பு இல்லாத பணி. இக்குண இயல்பு உடையவன்தான் இறைவாக்குரைப்போன். இவன் அழிவில் இருந்து மக்களை மீட்டு எடுக்கும் அன்புக்குரிய நண்பனாகவும் செயற்பட வேண்டியவன். தூய சிந்தையுடன் இறைவாக்குரைப்போன் செயற்படுவதால் வாக்கு வல்லமையும் இவனிடம் இருக்கின்றது. இக்குண இயல்புகளை உள்ளடக்கிய இவர்கள் வீதிச் சமிக்கை விளக்குகளுக்கு ஒத்தே செயற்பட்டார்கள் - செயற்பட இன்னும் அழைக்கப்படுகின்றார்கள்.

மேற்கூறிய கருத்தோட்டத்திற்கு ஒப்ப அனைத்து மக்களின் மீட்புப் பணியே தன்பணி என்று உணர்ந்து, அன்று தன்னை வட்டமிட்டு இருந்த அனைத்து மக்களுக்கும் ஆலோசனை கூறும் ஒருவராக ஆமோஸ் காணப்பட்டார். மீட்பியல் வரலாறு அழைக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களை வட்டமிட்டு வாழ்ந்தவர்க்கும் பொதுவானது என்பது ஆமோசுடைய ஆய்வுரைக் கண்ணோட்டம். இக்கருத்துக்கள் நிறைந்து காணப்படும் பகுதியே ஆமோஸ் முதலாம், இரண்டாம் அதிகாரங்கள்.

அன்று ஆமோசைச்சுற்றி வாழ்ந்த தமஸ்கு (1:3-5) காஸிசா, தீரு (1: ஏதோம் (1:11-12) அம்மோன் 15) மோவாப் (2:1-3) இவர்கய அரசியல், சமூக, சமய தவறுகளை ஆராய்ந்து அவர்களுக்கு வரும் ஆபத்துக்கள் பற்றி அறிவுரை கூறுகின்றார். காரணம், இவர்களும் இறைமக்கள் என்ற உத்துதலே. யூத விசுவாசிகள் அல்லாதோரும் மீட்பின் பணிக்கு உட்பட்டவர்கள். இவர்களை மறந்தோ வெறுத்தோ விட்டு விடுவது தவறு என்று கூறாமல் கூறுகின்றார் ஆமோஸ்.

மீட்பியல் அனைத்துலக மக்களுக்கும் உரியது என்ற இறையியலை வளர்த்தெடுத்த பெருமை கி.மு. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆமோசையே சேரும்.

இறைவாக்குரைப்போனான ஆமோஸ், சாதாரண மேய்ப்பனாக இருந்தாலும் அரசியல் அவதானியாகவும் இருந்தார். அரசியலையும் இறையியலையும் இணைத்துப் பார்க்கும் இறையியலாளனாகவும் காணப்பட்டார் ஏசாயாவை அரசியல் இறைவாக்குனன் என்று வர்ணிக்கின்றோம். காரணம், அவர் அரசியலில் வாழ்ந்து கொண்டே இறைவாக்குரைத்தார்.

ஆமோஸ் மேய்ப்பனாக இருந்தாலும், அரசியல் அவதானியாக நின்று, அரசியல் மாறும் என்றும் மாறுகின்ற அரசியலால் பேரழிவு ஏற்படும் என்றும் கூறிவதில் இருந்து இவரையும். அரசியல் சார்ந்த இறைவாக்குனன் என்று கூற இடமுண்டு.

யூதா, இஸ்ரவேல் இவர்களை வட்டமிட்டு வாழ்ந்த நாடுகளுக்கு எச்சரிப்பு விடுக்க ஆமோஸ் இறுதியாக யூதா (2.4-5) இஸ்ரவேல் (2:6-8) இருவரையும் எச்சரிக்கின்றார். இவர்களுடைய அரசியல், சமூக, சமய தவறுகளை நன்கு ஆராய்ச்சி செய்து, சூழ்நிலை சார்ந்து மாறப் போகும் அரசியலால் ஏற்படப் போகும் தாக்கங்கள் குறித்து எச்சரிக்கின்றார். இவருடைய சிந்தையில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் சிறுமைப்பட்ட மக்களே.

உலகவியலும், அரசியலும் வேண்டாதவை - இவை இறைவனுக்குப் பிரிய மற்றது என்று கூறிக்கொண்டு அரசியலுக்கு விலகியும் அரசியலை விலக்கியும் வாழும் இறை நேசர்கள் சிலர் கூறுவது, உலகத்திலும் உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. 1 யோவான் 2:15.

அரசியலுக்கும் கிறிஸ்து இயேசுவுக்கும் சம்மந்தம் என்ன? இவருடைய அரசியற் கண்ணோட்டம் என்ன? என்று அறிய விரும்பியவர்கள் விடுத்த வினவிற்கு இராசனுடையதை இராசனுக்கும் இறைவனுடையதை இறைவனுக்கும் கொடுங்கள்'' (மத்தேயு 22:21) என்றார் இயேசு. இறை நேசர்கட்கும் அரசியலுக்கும் தொடர்பு இல்லாமல் போக வாய்ப்பு இல்லை என்ற உண்மை மேற்கூறப்பட்ட வாக்கியத்தால் உறுதி செய்யப்படுகின்றது.

உலகவியல் என்ற சாக்கடையிலே விழுந்தவர்கள் அரசியலைக் குளப்பி அனர்த்தனங்களையும், அழிவுகளையும் உண்டாக்கி முகாரி இராகம் இசைக்கும் கருவிகளாக மக்களை மாற்றிவிட்டார்கள். இம் மக்கள் பூபாள இராகம் மீட்கும் காலம் உருவாகுவதற்கு இறைநேசர்களும் இறைவாக்குரைப்போரும் அவசியம் வேண்டும். இவர்களினூலேயே பாகுபாடு அற்ற, பக்கச் சார்பு அற்ற ஏற்ற இறக்கம் அற்ற ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்த முடியும். அனைவரும் இறைமக்கள் என்ற உணர்வு இவர்களுக்குத்தான் உண்டு. இவ்வுணர்வினுல் உந்தப்பட்டே புதிய இறையியலை ஆமோஸ் அமைத்தார்-இறைவாக்குரைத்தார்.

அரசியலிற் பங்கு கொள்வது என்பது முழுவதுமாக அரசியலில் குதித்துக் கூத்தாட வேண்டும் என்பது பொருளல்ல. திருமறையை ஆராய்கின்றோம்-இன்றைய நாளுக்கு உரிய செய்தி என்ன என்று அறிந்து திருமறையை விமர்சிக்கின்றோம். இதே போல அரசியலையும். அரசியலால் ஏற்படும் பின்விளைவுகளையும், தாக்கங்களையும் ஆராய்ந்து அறிந்து, எதிர்கால மக்களின் புதுவாழ்வுக்காகத் திட்டமிட்டுச் செயற்பட அழைக்கப்பட்டவர்களே இறைநேசர்களும் இறைமக்களும் என்பது உண்மை.

இறை மக்களின் பார்வை அரசியல்-சமூக-சமய அவதானிப்புடன் இறையியல்த் தூரப்பார்வையுடன் செயற்பட வேண்டும். இப்பணியையே ஆமோசும் செய்தார். இவருடைய பணியில் அனைத்துலக இறைவன் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது. இக்கருத்தை, சிலுவையில் நின்று வந்த அன்பின்குரல் வழி மொழிவதாயுள்ளது. லூக்கா 23:24. அடுத்து, சிலுவையில் உயர்த்தப்படும் போது சகலரையும் ஈர்த்து கொள்ளுவேன் என்கிறார். யோவான் 12:32. இயேசு கிறிஸ்து அனைத்து உலகிற்கும் உரியவர் என்று லூக்கா 3:23-38 வாக்கியங்களின் இறுதிப் பகுதியால் அறிதியிட்டுக் கூறுகின்றார். இறைவன் எல்லா மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்படுபவர் என்று கூறும் போது எல்லா மக்களும் இறைவனுடையவர்கள் என்பது உண்மையாகின்றது.

நம்முடைய தேச மீட்பரும் மேய்ப்பருமாகிய கிறிஸ்து அகில உலகிற்கும் உரியவர். அதனால், அவரைத் தலைமையாகக் கொண்ட திருச்சபை அவரிலே இணைக்கப்பட்ட சரீரமாகிய திருச்சபை ஆகியவையும் அகில உலகிற்கும் உரியன. இத்திருச்சபை, சிறுமைப்பட்ட எல்லா மக்களையும் நேசிக்க வேண்டும் என்பது உண்மை. இவ்வுண்மைக்கு முரண்பட்டு, பக்கம் பார்த்து நடக்க மனமற்று, கடிவாளம் பூட்டிய குதிரைகள் போல, நேர்வழி நடப்பதுதான் நம்வழி என்று பற்றுறுதியையும் பக்தியையும் காத்து, உலகவியலுக்கு இவர்கள் விலகிச் சென்றால் நல்ல சமாரியனுடைய பணியை யார் செய்வது? சிந்தித்துப் பாருங்கள்.

சமயங்களின் மெய்க்காப்பாளர் நாங்கள் என்று கூறிக்கொண்டு செயற்பட்ட அரசியலாளர்கள் சமய தர்மங்களைக் காத்தார்களா? காத்திருந்தால் ஏன் இந்த அழிவுகள். சமயத்தைத் தத்தெடுத்துக் கொண்ட அரசியலாளர்கள் அதர்மத்திற்கு வித்திட்டார்களேயொழிய தர்மத்தைக் காத்தார்களா? இல்லை. இவர்களுடைய அரசியல் அஸ்தமிக்கும் என்பதை விட அரசியலாளர்களின் அதர்மவழி அவர்களையே அழித்துவிடும் என்று கூறுவது சிறப்புடையது. இறைவழி அன்பு வழி. இவ்வழி ஆக்கப்பணியில் ஈடுபடுமே அன்றி அழிவுகளில் அல்ல. அழிவுப் பாதையில் நிற்கும் எவரும் அன்பு என்ற சொல்லை உச்சரிக்கும் தகுதி இல்லாவர்களே.

அழிந்து போகும், நாற்றமெடுக்கும் சாக்கடை அரசியலில் இறைவனைப் பயன்படுத்தியும் இறை அருளாற் பெறப்பட்ட அருள் மறைகளின் வார்த்தைகளைப் பயன்படுத்தியும் அரசியலைப் பாதுகாக்கலாம் என்பது பகற்கனவு. சமூக சமய பொருளாதாரத்தைக் கெடுக்கும் எந்த அரசும் கெட்டே போகும். இதுவே சரித்திரம். இதற்கு எந்தவொரு நாடும் விதி விலக்கல்ல. இவ்வுண்மையைத் தனது புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்களிலும் பொதிந்து வைத்துள்ளார் ஆமோஸ்.

தத்தமது வாழ்வு சிறக்க, அரசியல் சிறக்க, தம்தம் வசதிக் கேற்ப இறைவனையும் இறைவார்த்தைகளையும் பயன் படுத்திச் சிறுமைப்பட்டவர்களை ஏமாற்றி இவர்களைத் தமது ஏணிப்படிகளாகப் பயன் படுத்திக் கொள்பவர்கள் நசுங்கிப் போவார்கள் என்று ஆமோஸ் 2:13 வசனம் கூறுகின்றது. சிறுமைப்பட்ட அனைத்துலக மக்களுக்காகச் செயற்பட்டுக் கொண்டே இருக்கும் இறைவன் சிறுமைப் படுத்துபவர்களின் செயற்பாட்டையும் சிந்தனையையும் நன்கு அறிவார். அன்னாரின் பொய் வாழ்வு அழியும். இதுவே கி. மு. எட்டாம் நூற்றாண்டின் செய்தியாக இருந்தது- இன்றும் இதுவே செய்தி —வண. ஆ. வே. இ.

## செய்திக்கதிர்.

### ★ பேரன் கவிதைகள்.

நெல்லை. க. பேரன் எழுதிய பேரன் கவிதைகள் என்னும் நூல் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு (8. 8. 89) யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள அஸ்ரன் கல்வி நிலையத்தில் அஞ்சலத் திணைக்களப் பிரதேசக் கணக்காளர் திரு. சு. சிவபாலன் தலைமையில் நடைபெற்றது. புலவர் ம. பார்வதி நாதசிவம், கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி, திருமதி பத்மா சோமஸ்கந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்கள். முதற் பிரதியை பட்டயக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

### ● மாலைதீவு நீதிமன்றத்தில்.

சதிப்புரட்சிக் குற்றச் சாட்டின் மூலம், மரண தண்டனை விதிக்கப் பெற்ற 6 இலங்கைத் தமிழ் இளைஞர்கள், தமது கடைசி ஆசையைத் தெரிவிக்கும்போது. "இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறும் வரை, வடக்குக் கிழக்கு மாகாண எல்லைப்பகுதிகளில் மட்டுமே அவை நிறுத்திவைக்கப்பட வேண்டும்;" என்று நீதிபதிக்குச் சொன்னார்கள். இது, நீதிபதியால் பதிவேட்டில் பதியப்பட்டது.

### ❀ தங்கப் பதக்கம்.

தெல்லிப்பழை மாவட்டச் சுகாதாரப் பிரிவில் அடங்கும் பத்துச் சுகாதாரக் கிளினிக் நிலையங்களிலும், 1988ம் ஆண்டு ஜூலை மாத 1ம் திகதி முதல் நவம்பர் மாத 1ம் திகதிவரை முக்கூட்டு மருந்தை ஒழுங்காகப் பெற்றுக் கொண்ட குழந்தைகளில், அதிஷ்டத் தெரிவு மூலம் தெரிந்தெடுக்கப்படும் குழந்தைக்குத் தங்கப் பதக்கம் வழங்கப் படவுள்ளது.

### புதிய பிரதமர்.

நியூசிலாந்துப் பிரதமர் திரு. டேவிட் லோங்கோ, தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். அமைச்சரவையிலுள்ள ஏனைய உறுப்பினர்கள் மீது தமக்குப் பூரண நம்பிக்கை இல்லையென்றும், தான் இப்பதவியிலிருப்பது உடல் நலத்திற்கு உகந்தது அல்லவென்றும் அவர் தெரிவித்தார். முன்னாள் பதில் பிரதமர் திரு ஜெவ்றி பாமர் புதிய பிரதமராகப் பதவியேற்றார், பிரதிப் பிரதமராக, செல்வி ஹெலென் கிளார்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நியூசிலாந்தின் பிரதிப் பிரதமர் பதவியை வகிக்கும் முதற் பெண்மணி இவரே.

### ★ 35,150 ஆலயங்கள்.

தமிழ் நாட்டிலுள்ள இந்து அறநிலையத்தின் கட்டுப்பாட்டின் கீழ், 35,150 ஆலயங்கள் உள்ளதென இந்து அறநிலையமைச்சர் திருவாளர் கே. பி. கந்தசாமி தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், தமிழ் நாட்டிலுள்ள கோயில்களுக்கு, 5 இலட்சம் ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளன எனவும் தெரிவித்தார்.

### ● சோவியத்தின் அனுமதி.

சோவியத் யூனியன், தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களைப் பார்வையிடுவதற்கு அமெரிக்காவிற்கு அனுமதி அளித்துள்ளது. நீண்ட நாட்களாகக் கேட்டு வந்த கோரிக்கைக்குச் சோவியத் அரசு அனுமதி அளித்ததால் இவ்வாண்டு இறுதிக்குள் அமெரிக்கா இரசாயன ஆயுதங்களைப் பார்வையிடும்.

### ❀ விஷேட படை.

கொழும்பிலும் தென்பகுதியிலுமுள்ள இந்திய நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஜே வி. பி. யினர் தீவிரப்படுத்தியதை அடுத்து, இந்திய தூதரகத்திற்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக, 140 பேர் கொண்ட விஷேட படை ஒன்று, இலங்கை அரசின் அனுமதியுடன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளது.

### 92 குடிசைகள் தீக்கிரை.

சென்னையிலுள்ள புளியந்தோப்புப் பகுதியில், கடந்த வெள்ளிக்கிழமையன்று (4. 8. 89) இடம்பெற்ற தீவிபத்தில், 92 குடிசைகள் எரிந்து சாம்பராகின. இதனால் எந்தவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்ட பொழுதும், சுமார் 50,000 மதிப்புள்ள உடமைகள் அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

**தாரகை ஒளி:-**

சண்டைக் காரியோ டாண்மனை வசிப்பதில்;
வீட்டின்மேல் மூலையில் தங்கலே நன்றாம்.

— நீதிமொழிகள். 21 : 09

# எங்கள் கருத்து

## இறைவன் செயலாற்றுகிறார்.

இன்று நமது நாட்டின் நிலையை நினைக்குங்கால், மனம் வருந்தாதவர்கள் இல்லையென்றே கூறலாம். எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, அழிவு. மக்களின் அபயக்குரல் வானோக்கி எழுகின்றது. "இறைவா, வானத்தைக் கிழித்து நீர் இறங்கி வரமாட்டீரா? இத்துன்பங்களிலிருந்து எங்களை மீட்கமாட்டீரா?" என அபயக்குரல் எழுப்புகின்றனர் நம் மக்கள்.

இது, மக்களின் சிதைந்த உள்ளங்களிலிருந்து, ததும்பியெழும்பும் வேதனைக்குரல். ஆனால், மக்களின் தலைவர்கள் இறைவனை நோக்கிப் பார்க்க மறுக்கிறார்களே! மனிதரின் துணை நிரந்தரமற்றதென அனுபவத்தில் கண்டும் உணராமல், இன்னும் பிறரின் உதவியைத்தான் நாடித் தேடுகின்றார்களே! நாடு முழுவதும் சீர் குலைந்திருக்கும் இக்கட்டத்தில் யார் எங்களுக்கு உதவி செய்ய முன் வருவார்கள்? ஆயுதப்பெலனில் தங்கியிருக்கலாமா? தென்பகுதியில் நடைபெறுவதை உற்று நோக்குங்கள். ஆயுதத்தோடு ஆயுதம் மோதும்போது ஏற்படும் அழிவைத்தானே காண்கிறோம்! இக்கட்டத்தில் நமது நாட்டை, அழிவிலிருந்து யார் மீட்கமுடியும்? சிந்தித்துப் பாருங்கள்!!

ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டு கட்கு முன்பு, பலஸ்தீனாவில் நடந்த சம்பவம் இது. யூதா நாட்டை ஆண்ட யோசபாத் அரசன், மிகுந்த தேவபக்தியுடையவன். எதிர் பாராத வண்ணம் அவனுக்கு ஒரு கொடிய சோதனை ஏற்பட்டது. அவனது நாட்டைச் சுற்றியிருந்த குறுநில மன்னர்கள் அவனுக்கு விரோதமாகச் சதி செய்து, அவனின் நாட்டைக் கைப்பற்றப் புறப்பட்டனர். விரோதிகளின் இராணுவத் தொகை மிகப் பெரிது. இவர்கள், யூதா நாட்டை நோக்கி வருவதைக் கண்ட யோசபாத் அரசனின் ஒற்றர்கள் விரைந்து வந்து, இச் செய்தியை அரசனுக்கு அறிவித்தனர்.

"இதைக் கேட்ட அரசன், தன் நண்பர்களாயிருந்த மற்ற நாட்டு அரசர்களிடம் உதவியை நாடித்தூதுவர்களை அனுப்புவான்," என்றுதான் அவ்வொற்றர்கள் எண்ணினர். ஆனால், யோசபாத் எவ்வித பதட்டமுமின்றி, தன் நாட்டு மக்களிடம் வேண்டி நின்றான் — ஒன்று கூடிச் செபிக்கும்படி அழைப்பு விடுத்தான். அப்படியே யூத மக்கள் செய்தனர்— எல்லாம் வல்ல இறைவனின் உதவியை நாடி ஒன்று கூடினர்.

இதன் மூலம் நாமறியும் உண்மை என்ன? யோசபாத் அரசன், தன்னைப் போன்ற மனிதர்களாகிய மற்ற அரசர்களின் உதவியைத் தேடிப் போகாமல், எல்லாம் வல்ல இறைவனின் உதவியை நாடினான். தன்னோடு கூட்டுச்சேர்ந்து பிரார்த்தனை செய்யத் தன் நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தான். யோசபாத்தின் இச் செயலைக் கேள்விப்பட்ட அவனது விரோதிகள், எள்ளி நகைத்திருப்பார்கள். நாட்டின் நெருக்கடியான நிலையில், எந்த அரசனும் செய்ய நினைக்காத செயலல்லவா இது?

ஆனால் நடந்தது என்ன? எல்லாம் வல்ல இறைவன், யோசபாத் அரசனின் அசையாத உறுதியான நம்பிக்கையைக் கண்டார். தாம் அவனைக் கைவிடாமல் அவனுக்கு வெற்றிவாகை சூடுவதாகத் தமது இறைவாக்குனரின் மூலம் உறுதியளித்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் யோசபாத்தின் இராணுவம் போர்க்களத்திற்குச் சென்றபோது, அங்கு கண்ட காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது! முதல் நாள் இரவு, அந்த விரோதிகளுக்குள்ளே எழுந்த பிணக்கினால் ஒருவரையொருவர் கொன்று தீர்த்தனர். அதனால், யோசபாத்திற்குப் போரிடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. "கடவுள் உங்களுக்காகப் போராடுவார், நீங்கள் பேசாதிருங்கள்" (யா. 14:14) என்று தொடக்கத்தில் மோசே எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் மக்களுக்கு உரைத்தது, தமது நாட்டில் இன்று நிறைவேறியது என்பதை யோசபாத்தும் அவன் மக்களும் நினைவு கூர்ந்திருப்பர்.

நமது நாட்டினது மக்களின் நலனுக்காக இன்று பாடுபடுவதாகக் கூறும் தலைவர்கள், இந்த உண்மையை உணரவேண்டும். குறிப்பாக நமது தமிழ்த் தலைவர்கள், பிறர் கரங்களல்ல, இறைவனின் கரங்களே நம்மை ஈடேற்றும் என்ற உண்மையை உணர்வார்களா? உணர்ந்தால், பிரிவினைகள் அகலும். மக்கள் ஒன்றுபடுவார்கள். 'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம்' என்ற உயரிய நோக்குடன் ஒன்றுபட்ட வாழ்வை நமது தமிழ்ப் பகுதிகளில் வளர்க்க வேண்டியது நமது கடமையல்லவா?

இறைவன் பேசாதிருக்கவில்லை. அவர் செயலாற்றுகிறார். அவர் அருளும் சமாதானம் நம் நாட்டில், நம் பகுதிகளில், நிரந்தரமாக நிலைப்பதற்கு, இப்போ தடைகள் அகற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன. முடிவில் சமாதானம் மலரும். இது நிச்சயம். இந்த உறுதியான நம்பிக்கையுடன் சமாதானத்திற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவோம் வாருங்கள்!

### "என்கடன் பணிசெய்து கிடப்பதே."

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று பாடினார் அப்பர். இதனையே தலைப்பாகக் கொண்டு திரு. வி. க. ஒரு சிறந்த நூல் எழுதியிருக்கிறார். அப்பர் பாடும்போது "என் கடன் பணி செய்வதே" என்று மட்டுங் கூறவில்லை. "பணி செய்து கிடப்பதே" என்று பாடினார் "கிடப்பது" என்ற சொல்லின் பொருள் ஆழமானது. புகழ், பாராட்டு எதையும் எதிர்பாராமல் பணி செய்வதையே "கிடப்பது" என்று குறிப்பிடுகிறார்.

'எனக்கென ஒன்றுமில்லை. எல்லாமே உன்னுடையவை. ஆற்றலும் நீ தந்தது. உடலும் நீ தந்தது. அனைத்துமே நீ தந்ததுதான். நீ அளித்தவற்றைக் கொண்டு, பணி நடைபெறுகிறது" என்ற பாவனையுடன் பலனை எதிர் பாராமல், கடமை செய்வதைத்தான் அப்பர் அடிகள் "பணி செய்து கிடப்பது" என்று குறிப்பிடுகிறார்.

"பணி செய்து கிடப்பது" என்ற கருத்தின் ஆழத்தையும் அழகையும் விளக்கி, திரு. வி. க. தமது நூலில் பல பக்கங்கள் எழுதினார். காந்தி அடிகளின் வாழ்விலும் வாக்கிலும் மனம் திளைத்தவர் திரு. வி. க. "என் கடன் பணி செய்து கிடப்பது" என்பதன் அழகை அடிகளின் வாழ்க்கையிற் கண்டு அனுபவித்தவர் அவர். ஆகவே, அவர் இத்தொடரை அத்தனை அழகுற விளக்கி எழுதியிருக்கிறார்.

இத்தொடரின் உயர்ந்த உண்மையை விளக்கும் வகையில், காந்தியத் தொண்டுகள் நடைபெற்று வருவது பாராட்டப்பட வேண்டியதே. இப்பணியில், தங்கள் வாழ்வையே அளித்துக் கொண்டிருக்கிறார்கள் தொண்டர் பலர். அவர்களோ புகழை நாடவில்லை- வேண்டவில்லை-பாராட்டுக்காகக் காத்திருக்கவில்லை. தங்களுக்குரிய புகழையும் தத்தம் தொண்டிலே கரைத்துக் கொண்டிருக்கிறார்கள். நகரங்களுக்கு வெளியேயுள்ள சிற்சிறு கிராமங்களிற் தங்கிப்பணி செய்கிறார்கள். அவர்கள் பணி உயர்ந்த பணி.

டாக்டர் மு. வ.

புதிய வெளியீடு.

இலங்கை வேதாகமச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட "புதிய ஆரம்பம்" என்ற புதிய ஏற்பாட்டு நூல் பல அளவுகளில் எம்மிடம் உள்ளது. வாங்கிப் பயனடையுங்கள்.

புதிய ஆரம்பம்:-
Pocket Size - 15/-
(*Plastic Cover*)
Pocket Size - 12/-
(*Hard Cover*)

நிர்வாகி
திருமறை இல்லம்.
182, 1ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

### தியாக சேவையே சிறந்த சேவை!

ஒரு கிராமத்தின் வெளிப்பகுதியில சில மூங்கில் மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றுமிக உயரமாகவும் அதிக வனப்புள்ளதாகவும் விளங்கியது.

ஒரு நாள், அக்காட்டின் சொந்தக்காரன், அந்த மூங்கில் மரத்தினிடம் வந்து' "நீ எனக்குப் பணிவிடை செய்வாயா? "என்று கேட்டான்.

மூங்கில் மரம் "ஆம் ஐயா, நான் உமக்குச் சேவை செய்கிறேன். நான் என் சகோதரருடன் இங்கிருந்து களைத்து வரும் பயணிகளுக்கு, நண்பகல் வெய்யிலில் குளிர்ந்த நிழல் தந்து உதவி செய்கிறேன்,, என்று கூறியது அதற்கு அம்மனிதன், "இது நல்ல சேவைதான், ஆனால் அது சிறந்த சேவையல்ல' என்றான்.

மறுநாள் அம்மனிதன் மூங்கிலிடம் வந்து, "நீ எனக்குச் சேவை செய்வாயா? என்று கேட்டான், அதற்கு மூங்கில் மரம், ஆம் ஐயா நான் உமக்குச் சேவை செய்கிறேன். கிராமத்திலுள்ள சிறுவர்கள் என்னைச் சுற்றி விளையும் மூளையை வெட்டி, அதைக் குழலாகச் செய்து, ஊதி, இன்னிசை எழுப்பிப் பாடி விளையாடுகின்றனர்'என்றுகூறியது. அதற்கு அம் மனிதன், "அது நல்ல சேவை தான் இருந்தும் இது உன் சக்திக்குப் போதுமானது அல்ல' என்றான்.

மறு நாளும் அம்மனிதன் மூங்கிலைப் பார்த்துத் தனக்குச் சேவை செய் எனக் கேட்டான். அதற்குப் பதிலாக மூங்கில், 'ஆம் ஐயா, நான் உமக்குச் சேவை செய்கிறேன். கிராமத்திலுள்ள மக்கள், எனது பச்சிளங் கிளைகளைச் சமைத்து உணவாகச் சாப்பிடுகிறார்கள் என்றது. அதற்கு அம்மனிதன், "நீ செய்யும் பணி நல்லதுதான். ஆனால் அது மட்டும் போதாது' என்றான். இதைக் கேட்ட மூங்கில் மிக்க சலிப்படைந்து, நாளை இக்காட்டின் சொந்தக்காரன் மீண்டும் என்னிடம் வந்து, நான் செய்யும் சேவையைப் பற்றிக் கேட்டால் என்ன பதில் கூறுவது? 'என ஆழமாகச் சிந்தித்தது.

மறு நாளும் அம் மனிதன் மூங்கிலிடம் வந்து, 'நீ எனக்குச் சேவை செய்கிறாயா? எனக் கேட்டான். அதற்கு மூங்கில், ' என் ஆண்டவனே, என்னால் இயன்ற சேவைகளைச் செய்கிறேன் இவற்றை விடச் சிறந்த சேவை எதுவென எனக்குப் புலப்படவில்லையே 'என்றது - 'மூங்கில் மிக்க அரிய சேவைகளை மக்களுக்குச்செய்து விட்டுத் திருப்தியாய் இருக்கிறதே' என்று அம் மனிதன் கவலையுற்றான்.

பின்பு அம் மனிதன் மூங்கிலை நோக்கி, 'நீ செய்யக்கூடிய சேவை ஒன்றிருக்கிறது! உன்வேரை வெட்டி விடட்டுமா? என்றான். மூங்கில் அதைக் கேட்டுத் திடுக்குற்றது. பின்னர் "என்னை வேரிலிருந்து பிரிப்பதால், எனக்குச்சேதம் ஏற்படுமா? என்று கேட்டதற்கு அம்மனிதன் "ஆம, கொஞ்சம் சேதம் ஏற்படும்' என்றான். மூங்கில் மரத்திற்குத்தன் எஜமான் மேல் அதிக பற்று இருந்ததால், "ஆகட்டும் எஜமானே, என் வேரை வெட்டி என்னை அதிலிருந்து பிரித்து விடுங்கள் என்றது.

அம் மனிதன் தன் கோடரியினால் அவ்வுயர்ந்த மூங்கிலை வெட்டினான். அது தரையில் விழுந்தது. 'உன்னுடைய இலைகளையும் கிளைகளையும் வெட்டட்டுமா? , என்று மறுபடியும் கேட்டான். மூங்கில் தன் அழகைக் குறித்து மிகப் பெருமை கொண்டிருந்ததால், பெருமூச்சு விட்டது. ஆயினும், தன் ஆண்டவனிடத்தில் தனக்குண்டான பற்றார்வத்தினால் "ஆம் ஐயா, நீங்கள் வெட்டி விடலாம், என்றது.

அவ்வாறே அவன் அம் மூங்கிலின் இலைகளையெல்லாம் வெட்டிய பின், வெறும் மூங்கிற் குச்சிமட்டுமே இருந்தது. அதை நோக்கி, 'மூங்கிலே. உன்மேல் உள்ள கணுக்கள், என் வேலைக்கு இடையூறாக இருக்கின்றன. அவைகளை வெட்டி எடுத்து விடலாமா? ,என்று கேட்டான். "அப்படியானால், அது என்னைச் சேதப்படுத்துமா? என்று மூங்கில் கேட்டதற்கு, அவன் "ஆம் உன்னைச் சேதப்படுத்தும, என்றான். ஆயினும் தன் எஜமானின் பேரில் உள்ள அன்பினால், மூங்கில் திடமனதோடு, 'அப்படியே ஆகட்டும்' என்றது. அம் மனிதன், தன் கத்தியினால், அம் மூங்கிலின் கணுக்களை வெட்டி எடுத்து விட்டான்.

பின்பு அக்காட்டின் சொந்தக்காரன், அம் மூங்கிற் குச்சியைத்தன் தோழின் மேல் வைத்துக் கொண்டு தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றான். அங்குள்ள மக்கள், போதிய தண்ணீரின்றிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். குழந்தைகள் குடிக்கத் தண்ணீரில்லாமற் தவித்தனர். வெய்யில்காலமானதால், ஓடையில் தண்ணீர் வற்றிவிட்டது. கிணற்றிலும் தண்ணீரில்லாமற் போய் விட்டது.

இதனைக்கண்ட இம்மனிதன் அக்கிராமத்தின் வெளிப்புறத்திலுள்ள ஒரு சிறிய குன்றையும், அதில்உள்ள ஒரு துவாரத்தில் ஊற்றுத்தண்ணீர் இருப்பதையும் கண்டான். அத்தண்ணீர் வெகு ஆழத்திலிருந்ததினால், அக்குன்றின் மேற்புறத்திற்கு வரவில்லை.

ஆதலால் அம்மனிதன், தான் வைத்திருந்த மூங்கிற் குச்சியின் ஒரு நுனியை, அக்குன்றினுள்ள ஊற்றின் வாய்வரை செலுத்தினான். என்ன ஆச்சரியம்! தண்ணீர் அம் மூங்கிற் குச்சியின் வழியாய் மேற்புறத்திலிருந்து வந்து பாய்ந்தது. கிராம மக்கள் வந்து, தங்கள் குடங்களை நிரப்பிக் கொண்டனர். அவ்வூற்றின் தண்ணீர் வற்றவேயில்லை. அக் கிராம மக்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர்.

ஒருநாள் அம்மனிதன் அப்பக்கம் வந்தான். அக்கிராமமக்களும் குழந்தைகளும் மிக்க மகிழ்ச்சியுடன் சுக வாழ்வு வாழ்ந்து வருவதைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

"இயேசு பெருமான் சேவை கொள்ளவல்ல சேவை செய்யவே வந்தார்"

## ALCOHOLISM AND DRUG ADDICTION— THE CHURCH'S RESPONSIBILITY.

The first section, 'church's response' is rather a statement on the church's understanding of, and attitude to the problem. The nature of the problem is an expression of the understanding of what 'alcoholism and addiction' mean in reality, so that our approach can also be realistic. The causes indicate the areas wherein, and levels at which the community must have preventive and therapeutic involvement. The last section, 'plan of action' is the recommendations of the conference for immediate implementation by the dioceses. The section on treatment is not included in this report.

Though not one and the same, alcoholism and addiction are used here almost as synonyms.

### The Church's response

We acknowledge that alcoholism and drug addiction are assuming alarming proportions affecting the physical, psychological, socio-economic and spiritual well-being of the individual. Addiction destroys not only the individual, but also his/her own family and the community at various levels. The church recognises the fact that the epidemic spread of addiction could destroy all progress and cut at the very root of human welfare.

Having recognised the frightening spread of the burning problem throughout the world, the church has the responsibility of combating this devastating trend.

There is an interplay of various factors that lead to problem drinking and an industrial society tends to provide potential situations that facilitate such an interaction. The sole responsibility of a person becoming alcoholic may ultimately rest on the individual himself; but a fuller understanding of the nature of the problem warrants the recognition of various socio-economic-cultural forces. Hence the church's attitude can never be judgmental but more acceptive, compassionate, constructive and reformative.

The church should encourage total abstinence. We would urge all church leaders, including the laity, to set an example to the flock in this regard.

From the Biblical point-of-view all of God's creation is good, but with the possibility of turning into evil at human hand. Alcohol and drugs are human products. Up to a degree these human products can be put to positive use, as in the case of medicine, for example. But abusive practice brings in evil. It ultimately distorts the human personality and destroys the image of God in man and his tremendous potentialities. Not only the individual, but his community and society at large also suffer from the destruction. This is going quite contrary to the will of a Father who is involved in bringing His Kingdom here on earth.

Hence we urge the church to face the issue as in a crisis and exercise its Ministry of bringing life, hope and liberation to the unfortunate victims and their families. The church must use all its spiritual resources, as well as medical, psychological and social-work skills through preventive, theraneutic rehabilitive actions, thus communicate and witness to the Abundant Life offered in Jesus Christ. The church must mobilise all its resources and engage in appropriate planning, education, prevention and treatment. While a minimum of competent institutional facilities has to be developed, our congregations must be equipped for the larger and wider role of building up a wholesome society, functioning basically as Healing, Caring and Prophetic Community and thus participate in the Holy Spirit with the Father in making His Kingdom a reality.

From indegenous literature and the Bible (Genesis 9: 20-21) it is to be understood that excessive drinking is not anything new or modern. From time immemorial intoxication was not unknown in almost every rate and hence it may be said that 'Alcoholism' is an age-old problem. Yet the alarming proportion in which it is spreading today, like an epidemic, calls for immediate actions. It has become a global phenomenon. Behind almost every murder, crime, burglary, rape and many physical illness the influence of alcohol is observed. It is now spreading into all sections of society, even into the remote villages and different age-groups, destroying many individuals, families and even community. Alcoholism leads to the person's physical, emotional socio-economic and spiritual destruction. The growing number on absenteeism in schools, colleges, factories, and institutions is an indication of the powerful influence of problem drinking.

The percentage of drug-addicts even among school children is increasing. The wasting of economic resources on the substance ruins the whole family and the worst affected are the women and children of the lower-income group. *( to be continued )*

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/ News 89
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182, 1st, Cross Street Jaffna on Friday 08, September 1989 and published by The Rev. THEVANESAN, 182, First Cross Street, Jaffna.

First Death Anniversary
IN LOVING MEMORY
of



**Winslow Thambiah Hayes Sukirtharatnam.**

"...... he that believeth in me, though he were dead, yet shall he live"

JOHN. 11: 25

*Fondly remembered by your loving* wife, children, in-laws & grand children.

"Ratna Green"
Uduvil.
CHUNNAKAM.

IN MEMORIAM.

In Ever loving Memory of

**Muhandiram Edwin Alagaratnam Emerson**

**Born : 30-3-1889**
**Died : 10-9-1953**

and

**Mrs. Lizzie Packiam Emerson**

**Born : 6-1-1893**
**Died : 22-5-1978**

Years may pass and fade away
But thoughts of you both will always stay.

*Inserted by their children, Grand children and Great Grand children,*

In treasured Memory
of our dearest
PAPA & AMMA

**Edwin Canagasingham Jesudasan**

Called to rest 25-4-67

and

**Rasamanie Jesudason**

Called to rest 24-8-87
(of College Lane, Vaddukoddai)

keep them dear Lord
till we meet again in
Thy kingdom.

*Affectionately remembered by their Children and families.*

*At Rest:*

Mr. K. Jeyaratnam.

We regret to record the death which took place at Staffordshire, U. K. of Mr. Kathiravetpillai Jeyaratnam of Araly North, Retired Accountant Gal Oya Development Board on September 2nd, 1989. The funeral service takes place at the residence of his son, Dr. Preman Jeyaratnam today (8-9-89) No. 3, The Covert, Clayton, New Castle, Underlyme, Strafford-shire, ST5, 4BL, U. K.

Mr. Jeyaratnam is an old boy of Jaffna College of the early Bicknell era and distinguished himself both in cricket and football. His father Mr. Kathiravetpillai was among the very early exponents of carnatic music in our churches.

Mr Jeyaratnam, after retirement closely associated himself with his church - Araly Church. His wife, Rose (nee Arulampalam) predeceased him in December 1986 after which Mr. Jeyaratnam left for U. K. to live with his son.

He leaves behind his sons Preman and Chandran: daughters, Yoga Ramanathan Mohini Sivagurunathan, sisters, Gladys Ponniah, and Siron Gnanamuthu.

(CHRISTIAN......continued)

She urged the youth to work towards a justice oriented, wholistic development of all people. She warned the young people against the conformist and reactionary forces operating in many subtle ways. State development, charity oriented development, justice oriented development and young people's involvement in movements for justice and human rights were the other issues, dealt with in her presentation.

The Rev. S. R. Cutting spoke on 'Church's Response to Human Suffering'. Quoting instances from his pastoral experience, he systematically evaluated the various understandings of 'Church'. Western theological input and minority complex have hindered the Indian Church from discovering its true identity and role in the Indian context, he pointed out. He said that as a result, Christian communities today have become insular and inhibitive in their witness and service. They have narrowed down the vastness of God's scope of salvation to the salvation of the soul alone thus taking a passive, indifferent attitude towards the existential demands of human life. He further pointed out that the Church is neither a building nor just a community of believers but a movement of God's people striving to usher in the Kingdom of God. Church is the visible sign of God's Kingdom, he added.

(to be continued next week)